ந.க.எண்.அ3/8887/2020
ச.ஆ.எண்.361/2020

காவல்துறை துணைத்தலைவர்
அலுவலகம், வேலூர் சரகம்
வேலூர்.
நாள்:14.09.2020.

## பணிவரன்முறை ஆணை

பொருள்: காவல் - பணியமைப்பு - வேலூர் சரகம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர் திரு.L.பொன்னுரங்கம், (TNPSC Reg. No.2710014297) இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழுமம், சென்னை -03, அவர்களின் க.எண்.2458/PSD-I/2020, நாள்: 28.05.2020.
2. காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்களின் ந.க.எண்.550316/NBG.2(2)/2020, நாள்:05.08.2020.
3. வேலூர் சரக ஆணை எண்.293/2020, ந.க.எண்.அ3/8887/2020, நாள்:17.08.2020.

----

பார்வை 1-ல் காணும் ஆணையின்படி திரு.L.பொன்னுரங்கம், (TNPSC Reg. No.2710014297) என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 முதல் 2019-2020 முடிய உள்ள நேரடி இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களில் (Group-IV) தேர்வின்படி நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, வேலூர் சரக அலுவலகத்தில் நேரடி இளநிலை உதவியாளராக 21.08.2020 முற்பகல் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார். இவர் இளநிலை உதவியாளர் நிலையில் பணிக்கு அறிக்கை செய்த நாள் முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

### நிபந்தனைகள்

1) இப்பணி வரன்முறை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற கிளைகள் மற்றும் வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ள வழக்குகள் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளுள் இறுதி நீதிமன்ற தீர்ப்பிற்குட்பட்டது.

2) மேலும் இவர் பணி ஏற்பு செய்த நாள்:21.08.2020 முதல் மூன்று ஆண்டுகாலம் தொடர்ச்சி பணியில், இரண்டு ஆண்டுகாலம் தகுதிகாண் பருவம் காலத்தில் வைக்கப்படுகிறார். மேலும் தகுதிகாண் பருவம் காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

ஒம்/-ந.காமினி,
காவல்துறை துணைத் தலைவர்,
வேலூர் சரகம், வேலூர்.

பெறுநர்
திரு. L.பொன்னுரங்கம், இளநிலை உதவியாளர், சரக அலுவலகம், வேலூர்.
நகல்: காவல்துறை தலைமை இயக்குனர், தமிழ்நாடு, சென்னை-04.
நகல்: சி1 உதவியாளர் மற்றும் சி பிரிவு கண்காணிப்பாளர், சரக அலுவலகம், வேலூர்.
நகல்: சரக ஆணை புத்தகம்.

//உ.ந.உ.ப//

முதுநிலை நிர்வாக அலுவலர்.